NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 20 June 2020

# நோயாளிகளிடம் இருந்து கிருமி பரவுவது முதல் வாரத்தில்தான் மிக அதிகம்

கொவிட்-19 நோயாளிகளிடமிருந்து சுற்றுச்சூழலில் கிருமி பரவல் ஆக அதிகமாக இருப்பது முதல் ஒரு வாரத்தில்தான் என்று தேசிய தொற்றுநோய்கள் மையத்தின் அண்மைய ஆய்வு கூறுகிறது. அதற்குப் பின் கிருமி பரவும் தன்மை பெருமளவு குறைந்துவிடுகிறது.

எனவே, மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய கொவிட்-19 நோயாளிகளிடம் பாரபட்சமாக நடந்துகொள்ளவோ அவர்களைத் தவிர்க்கவோ தேவையில்லை. அவர்களிடமிருந்து கிருமி பரவாது. அவர்களால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லை என்று அந்த மையம் நேற்றுத் தெரிவித்தது.

டியூக்-என்யுஎஸ் மருத்துவப் பள்ளி, டிஎஸ்ஓ நேஷனல் லேபரெட்டரிஸ் ஆகியவற்றுடன் இணைந்து நடத்தப்பட்ட ஆய்வில் கொவிட்-19ஐ ஏற்படுத்தும் சார்ஸ்-கொவி-2 வைரஸ் கிருமி மிகச் சிறியது என்றும் தீ போல பரவக்கூடியது என்றும் அறியப்பட்டுள்ளது.

ஆய்வின் தலைமை ஆய்வாளரான தேசிய தொற்றுநோய்கள் மையத்தின் மூத்த மருத்துவர், டாக்டர் காளீஸ்வர் மாரிமுத்து, கொவிட்-19 காற்றின் மூலம் பரவக்கூடியது என்பதை நிறுவ இந்த ஆய்வு முடிவுகள் போதுமானவையல்ல. காற்றில் வைரஸ் கிருமி இருப்பதை நிரூபிக்க வேண்டும்," என்றார்.

கொவிட்-19 நோயாளிகள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தின் வெவ்வேறு காலகட்டங்களில் அவர்களை வெவ்வேறு அழுத்த நிலைகளுள்ள 30 அறைகளில் தங்க வைத்து ஆய்வை செய்தனர். இவ்வறைகளில் கிருமிகள் வெளியேற்றுப்படும் அவை வரை அங்கேயே இருக்கும். இதில் 27 அறைகள் பொது வார்ட்டுகளிலும் மூன்று அறைகள் தீவிர சிகிச்சைப் பிரிவிலும் உள்ளன.

அதிகம் தொடப்படும் கட்டில் கைப்பிடி, இழுப்பறை, நாற்காலி, கழிவறை இருக்கை போன்ற மேற்பரப்புகளிலிருந்தும், பொது வார்ட்டின் காற்று வெளியேற்றப்படும் இடத்திலிருந்தும் கிருமி மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

அதிகம் தொடப்படும் இடங்களில் நோயாளி, நோய்வாய்ப்பட்டு நாட்கள் ஆக ஆக கிருமிப் பாதிப்பும் குறைந்துகொண்டே வருவதும் ஆய்வில் தெரியவந்தது. மூன்று தீவிர சிகிச்சை அறைகளிலும் மேற்பரப்புகளில் கிருமிகள் காணப்படவில்லை. தீவிர சிகிச்சைப் பிரிவு நோயாளிகளுக்கு நோய் ஏற்பட்டு பெரும்பாலும் இரண்டாவது வாரம் ஆகியிருக்கும் என்பதால் அவர்களிடம் இருந்து குறைந்தளவிலான கிருமிகளே வெளியேறும் எனக் கருதலாம் என தொற்றுநோய்கள் மையம் கூறியது.

இரு தீவிர சிகிச்சை அறைகளில் காற்றில் கிருமி காணப்பட்டது. அங்கிருந்த நோயாளிகள் ஐந்து நாட்களாக உடல்நலமின்றி இருந்தனர். மூன்றாவது அறையிலிருந்த காற்றில் கிருமி இருக்கவில்லை. அந்நோயாளிக்கு நோய் ஏற்பட்டு ஒன்பது நாட்களாகியிருந்தன.

வீடு திரும்பிய நோயாளிகள் சமூகத்தில் பாரபட்சமாக நடத்தப்படுவதை இந்த ஆய்வு குறைக்கும் என நம்புவதாக மையம் கூறியது.

மேற்கொண்டு கிருமி எத்தனை தூரம், எவ்வளவு காலத்துக்கு காற்றில் பயணிக்கும் என்பது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆய்வின் தலைமை அறிவியலறிஞரான டிஎஸ்ஓ உயிரியல் தற்காப்புத் திட்டத்தின் டாக்டர் மைக்கல் வோங், "சார்ஸ்-கொவி-2 கிருமிப் பரவல் குறித்த புதிரில் ஆய்வின் முடிவுகள் முக்கியமானவை," என்றார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.